| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் -<br>11. கார்பனும் அதன் சேர்மங்களும். | அலகு | 11 |
|---|---|---|---|
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 9 |

**கார்பனும் அதன் சேர்மங்களும்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ஒரு திறந்த சங்கலி தொடர் கரிம சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாடு $C_3H_6$ அந்தச் சேர்மத்தின் வகை

அ) அல்கேன் ஆ) அல்கீன் இ) அல்கைன் ஈ) ஆல்கஹால்

2. ஒரு கரிம சேர்மத்தின் IUPAC பெயர் 3 – மெத்தில்பியூட்டன் – 1- ஆல் இது எந்த வகைச் சேர்மம்

அ) ஆல்டிஹைடு ஆ) கார்பாசிலிக் அமிலம் இ) கீட்டோன் ஈ) ஆல்கஹால்

3. IUPAC பெயரிடுதலின் படி ஆல்டிஹைடுக்காக சேர்க்கப்படும் இரண்டாம் நிலை முன்னொட்டு ------- அ) ஆல் ஆ) ஆயிக் அமிலம் இ) ஏல் ஈ) அல்

4. பின்வரும் படி வரிசை சேர்மங்களில் தொடர்ச்சியாக வரும் இணை எது?

அ) $C_3H_8$ and $C_4H_{10}$ ஆ) $C_2H_2$ and $C_2H_4$ இ) $CH_4$ and $C_3H_6$ ஈ) $C_2H_5OH$ and $C_4H_8OH$

5. $C_2H_5OH + 3O_2 \rightarrow 2CO_2 + 3H_2O$ என்பது

அ) எத்தனால் ஒடுக்கம் ஆ) எத்தனால் எரிதல்

இ) எத்தனாயிக் அமிலம் ஆக்சிஜனேற்றம் ஈ) எத்தனேல் ஆக்சிஜனேற்றம்

6. எரிசாராயம் என்பது ஒரு நீர்ம கரைசல் இதிலுள்ள எத்தனாலின் சதவீதம் ---------

அ) 95.5 % ஆ) 75.5 % இ) 55.5% ஈ) 45.5 %

7. கீழ்கண்டவற்றுள் எது மயக்கமூட்டியாக பயன்படுகிறது.

அ) கார்பாக்சிலிக் அமிலம் ஆ) ஈதர் இ) எஸ்டர் ஈ) ஆல்டிஹைடு

8. TFM என்பது சோப்பின் எந்த பகுதிப் பொருளைக்குறிக்கிறது.

அ) தாது உப்பு ஆ) வைட்டமின் இ) கொழுப்பு அமிலம் ஈ) கார்போஹைட்ரேட்

9. கீழ்கண்டவற்றுள் டிடர்ஜெண்ட்டை பற்றி தவறான கூற்று எது?

அ) நீண்ட சங்கலி அமைப்பை பெற்ற கொழுப்பு அமிலத்தின் சோடிய உப்பு

ஆ) சல்போனிக் அமிலத்தின் சோடியம் உப்பு

இ) டிடர்ஜெண்ட்டின் அயனி பகுதி $SO_3^-Na^+$

ஈ) கடின நீரிலும் சிறப்பாக செயல்படும்

ஆக்கம் செ.பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் . அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்

LIVEWORKSHEETS